# வழிபாட்டு முறைகளில் பண்பாட்டு விழுமியங்கள்

**முனைவர் ஜெ. தேவி**

**பேராசிரியர் – தலைவர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைகழகம், தஞ்சாவூர். devirajkumar75@gmail.com**

**51**

**ஆய்வுச்சுருக்கம்**

பெரும்பான்மையான மக்கள் மன அமைதிக்காகவும், வாழ்க்கையில் தாங்கள் கோரியதை அடைந்து இன்புற்றிருக்கவும், முற்பிறவிகளில் செய்த பாவங்கள் தொலைந்து நற்கதியை அடையவும் தெய்வ வழிபாடு அவசியம் எனக் கருதுகிறார்கள். மக்களின் நம்பிக்கையால் தெய்வவழிபாட்டின் வளர்ச்சியானது.இன்றளவும் பல்கிப்பெருகி இருக்கிறது. தொடக்ககால தெய்வவழிபாட்டின் தோற்றம் அதன்பின்புலம்,தெய்வவழிபாட்டில் வழிபடும் பூசைப்பொருள்கள்,தெய்வபலியிடல் ஆகியன பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் தெய்வவழிபாட்டில் உள்ள சமுதாயப் பண்பு, விருந்தோம்பல் பண்பு, கூடிவாழும் ஒற்றுமைப்பண்பு,கலாச்சாரபண்பு ஆகிய பண்பாட்டு விழுமியங்களை இலக்கிய சான்றுகளுடன் எடுத்துரைக்கிறது. பண்டைய கால வழிபாட்டுமுறைகள் இன்றும் பின்பற்றப்படுகிறதா? என்பதையும் அதில் மறைந்து வந்துள்ள சடங்குகள் மற்றும் நிமித்தங்களையும் எடுத்துக் கூறும் வகையிலும் இவ்வாய்வுக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது.

**கலைச் சொற்கள்**

1. **நிமித்தம் - சகுனம், காரணம், அடையாளம்**
2. **சடங்கு - சாத்திரவிதி, வழக்கம்**
3. **பூசை - ஆராதனை, அடியார் அமுது செய்கை**
4. **இம்மை - இப்பிறப்பு (குறுந்.49)**
5. **ஏமப்பூசல் - அச்சம் தீர்ந்த ஆரவாரம்**
6. **உரியாளன் - உரியவன்**
7. **ஐயர் - அந்தணர், சான்றோர், இருடிகள்**
8. **ஐயன் - முருகன் (கலி. 43)**
9. **ஒல்லார் - உடன்படார், பகைவர்**
10. **ஊழ்மலர் - முதிர்ந்த மலர்**

**முன்னுரை**

தமிழரின் உயர்ந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் இன்றளவும் உலகிற்கு பறைசாற்றுவன நமக்கு கிடைத்துள்ள இலக்கியங்களே.அதிலும், சங்க இலக்கியங்கள் பண்பாடு சார்ந்த சிறந்த கருத்துகளையும், விழுமிய , உயரிய உணர்ச்சிகளையும், தனிமனித உயர்வினையும் விரிவாகக் கூறுகிறது. அவ்வகையிலேயே வழிபாட்டு விழுமியங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக தெய்வங்கள் பற்றிய செய்திகள் தமிழர் வழிபாட்டு நெறிகள், பெருந்தயவங்கள், சிறு தெய்வங்கள், வழிபாட்டு சடங்குகள், வழிபாட்டு முறைகள் ஆகிய குறிப்புகளும் ஏராளமாக விரவிக்

கிடைக்கின்றன. இவ்வழிபாட்டு முறைகள் நம் சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையை வகுத்துக் கொடுத்ததோடு, தமிழ்ச் சமூக வழிபாட்டு முறைகளில் இன்றும் தொடர்கின்றன. இதனை ஆய்வுநோக்கில் கண்டு அதில் உள்ள பண்பாட்டு விழிமியங்களை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது.

**வழிபாட்டின் தோற்றம் – வளர்ச்சி**

**"**பண்டைய கால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்க்கையை நடத்தினர். இயற்கையின் கூறுகளான இடி, மின்னல், மழை, காற்று, ஞாயிறு, திங்கள், மலை, கடல், நெருப்பு, கொடிய விலங்கு, மரம் முதலியவை அவர்களுக்கு அச்சத்தை விளைவித்தன. இயற்கை ஆற்றலுக்கு அஞ்சத் தொடங்கிய காலத்தில் அச்ச உணர்வு**கள்** கொள்ளத் தொடங்கி வழிபாடு தோன்றியது. கடற்பொருளில் கருத்துக் கொண்ட நெய்தல் நில மக்கள் சினைச் சுறாவின் கோடு நட்டு வணங்கிய நிலையை இலக்கியங்கள் காட்டுகின்றன. வாழ்க்கைத் தேவை **கருதி**, வாழ்க்கை முறையிலிருந்தும் வழிபாடு தோன்றியது என்று கூறலாம். **இதிலிருந்து** வழிபடு தெய்வங்கள் வழிபடுவோரின் வாழ்க்கை முறையிலிருந்து எழுகின்றன என்று**ம் கருதப்படுகிறது**.

**வழிபாட்டு முறையின் நோக்கம்**

**மனமானது** அலைந்து திரிவது, ஒன்றை நினைத்து சில வினாடிகள் கூட ஒரே வழியில் நில்லா**மல் இருப்பது**, கட்டுக்குள் அடங்கா**மலிருப்பது என பல வடிவம் பெறுகிறது.** இத்தகைய மனத்தை ஒரு **வழி செய்ய** ஒரே வழியில் நிலைபெறச் செய்வதே வழிபாட்டின் நோக்கம். இதனை,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடகல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"(**திருக்குறள்126**)

எனும் குறள் ஐம்பொறிகளையும் அடக்கி ஆள்வதால் ஏழு பிறவிக்கும் பெருமையடைய**லாம்** என்று கூறுகிறது. இறை நெறியாளர்கள் ஐம்பொறிகளையும் அடக்கி ஆண்டவனை மனதில் நிறுத்திப் பிறவிப் பயனை அடைவதே வழிபாட்டின் நோக்கம் **என்றும் கூறலாம்.**

**வழிபடும் தெய்வம்**

தெய்வங்கள் பல தொழப்படினும் வழி**படும்** தெய்வமாக அவரவர் தனக்கு ஒரு தெய்வத்தைக் கொண்டிருந்தனர். குன்றக் குறவர் முருகனையும், முல்லை நிலத்து ஆயர் மாயோனையும் தம் குலத்திற்கு உரிய வழிபடு தெய்வமாகக் கொண்டு போற்றிய செய்திகள் பல சங்கப் பாடல்களில் காணப்படுவதைப் பின்வரும் பாடலடிகள் **தெளிவுபடுத்துகின்றது.**

"அழிவலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண் கண்டாங்கு" (**நற்** 9: 1 - 2)

"வழிபட்ட தெய்வந்தான் வலிஎனச் சார்ந்தார்கள்
கழியும் நோய் கைம்மிக அணங்காகி யதுபோல" (**கலித்** 15:21-22)

என்றும்,

"வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கு"

(**பதி. பத்து 74**:25:26)

என்னும் பாடலடிகள் வழிபடு தெய்வம் பற்றி சிறப்பாக எடுத்துரைப்பது கருதத்தக்கதாகும்.

**வழிபாட்டிற்குரிய பொருள்கள்**

வழிபாட்டிற்குப் பல்வகைச் சாந்து, புகை விளக்கு, மலர் தெய்வத்திற்குப் படைப்பதற்குரிய பால்மடை, பலிச்சோறு முதலிய பலவும் கொண்டு செல்லுதல் மரபாகும்.

"வேறுபடு சாந்தமும், வீறுபடு புகையும்
ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்
நாறு கமழ் வீயும், கூறும் இசை முழுவதும்
மணியும், கயிறும் மயிலும் குடாரியும்
பிணிமுகம் உளப்படப் பிறவும் எந்தி
**அருவரைச் சேராத் தொழுநர்"** (பரி. 8:97-102)

**தெய்வத்தை வழிபடும் முறை**

மக்கள் தாம் வணங்கும் தெய்வங்களுக்குப் பலியீட்டு வணங்குவதைத் தம் வழக்கமாகக் கொண்டனர். அவ்வாறு பலி கொடுப்பதால் தெய்வம் நற்பலன் வழங்கும் என்று கருதினர். பலியிடுதல் உயிர் பலியாகவும் மலர் பலியாகவும் அமைந்தது. தொல்காப்பியம் வீரன் ஒருவன் போரில் தன் நாடு வெற்றி பெற வேண்டும் என்று தன்னையே பலியிட்ட நிகழ்வைப் பதிவு செய்திருக்கிறது. பலியிடுதல் நன்மையின் பொருட்டும் நற்பலன்களின் பொருட்டும் நடைபெறுகின்றது. இதனை,

**"ஒல்லார் நாணாப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றோடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவி பலியானும்"**

**(தொல்.பொருள். சூ.75:10-12)**

என்னும் சான்று தன் நாடு வெற்றி வேண்டித் தனது உயிரையே தீயிலிட்டு மாய்ந்த செய்தியை எடுத்தியம்புகின்றது.

**கூட்டு வழிபாடு**

வழிபாட்டு முறையில் கூட்டு வழிபாடு இன்றியமையாதது. அனைவரும் நன்மை பெறும் பொருட்டு கூட்டு வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. மனைவியர், பெற்றோர், குழந்தைகள், அன்புடைய சுற்றத்தார் இவர்களோடு சேர்ந்த திருமாலை மனதில் நினைத்து திருமாலிருஞ்சோலையைத் திசை நோக்கி தொழுதனர். இதனை,

**"தையலவரொடும் தந்தாதவரொடும்
கைம் மகவோடும் காதலவரொடும்
தெய்வம் பேணித் திசை தொழுதனிர்" (பெரும்பாண் 104)**

என்ற பாடல் அடிகள் எல்லோரும் ஒன்றாக இணைந்து கூட்டு வழிபாடு செய்தனர் என்ற பண்பாட்டினைப் புலப்படுத்துகின்றது.

**விருந்தோம்பல் பண்பாடு**

வழிபாட்டு முறைகளில் விருந்தோம்பல் பண்பாடானது கூட்டு யாத்திரை செல்லும் பொழுது வெளிப்படுகிறது.கூட்டு யாத்திரை செல்லும் வழக்கமும் சங்க காலத்தில் இருந்து வந்தது என்பதை,

**"ஆர் வேலை யாத்திரை செல் யாறு"** **(பதி. பத்து 91: 82)**

என்ற பாடலில் மிகுந்த ஆரவாரத்துடன் யாத்திரை சென்றனர் என்ற குறிப்பு வெளிப்படுகிறது. கூட்டு யாத்திரை செல்வதன் மூலம் சமுதாயத்தில் கீழ் நிலையில் வாழ்பவர்களை மன நிறைவு செய்வதற்காகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அவர்களின் நிலைக்குத் தாங்கள் இறங்கி செல்லாமல் அவர்களையும் தாங்கள் வாழ்கின்ற உயர்நிலைக்கு உயர்த்துவதைச் சீரிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டனர். இன்றைய காலத்தில் பணத்தை வைத்துக் கொண்டு யாத்திரை செல்கின்றோம். வாகனங்களில் செல்வதால் நேரம் மிச்சம் ஆகிறது என்று கருதுகிறோம். ஆனால் பலரைப் பற்றி அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும வாய்ப்புகள் குறைவு என்பதை அறிய மறுக்கிறோம். இதன் விளைவாக ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பாங்கு இல்லாமல் போகிறது.

பழங்காலத்தில் வழிநடைப்பயணமாக யாத்திரை சென்றதால் பலருடன் பழகும் வாய்ப்பும், அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளவும் முடிந்தது. யாத்திரை செல்வோர் உணவோ பணமோ எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எல்லோரிடத்திலும் உதவி செய்யும் மனப்பக்குவம் அமைந்திருந்தது. யாத்திரை வருபவர்களை இன்முகத்தோடு ஊர் மக்கள் உபசரித்தனர். அவர்களை விருந்தினர்களாகவும் மதித்தார்கள். விருந்தோம்பல் பண்பு வீடு தோறும் நிறைந்திருந்தது. இவ்வாறாக யாத்திரிகர்கள் மூலம் நாடு எங்கும் விருந்தோம்பல் பண்பானது வழிபாட்டு முறைகளில் அதிகரித்துக் கொண்டே இருந்தது என்னும் கருத்து புலப்படுகிறது.

**கொடைப் பண்பு**

பெரிய தேன் சிறிய ரதம் துவசங்களாகிய குடிகள் ஆகியவற்றை அரசர்கள் கோயிலுக்கு வழங்கினார்கள் என்பதை "நெடுந்தேர் நுடங்கு கொடி"என்ற பதிற்றுப்பத்து பாடலடி உணர்த்துகிறது.

குறுநில மன்னர்கள் கோயில் பாதுகாப்புக்கு வீரர்களை நியமித்து யானைகளையும் கோவிலுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

**"கறைஅடி யானை நன்னன்"** **(அகம். 155:10)**

**வழிபாட்டில் விழாக்கள்**

மக்கள் பலர் கூடி தெய்வங்களின் பொருட்டு செய்யும் சிறப்பே விழா ஆகும். விழவு, சாறு என்றும் குறிக்கப்படும். பேரூர்களிலிலும் சிற்றூர்களிலும் பெருவிழா கொண்டாடி மக்கள் மகிழ்ந்தனர். இதனை,

**"சாறுகொள் ஊர்"** **(குறுந்.41:2)**

**"பேர் ஊர் கொண்ட ஆர்கலி விழவு"** **(குறுந். 223:1)**

**"விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்"** **(பெரும்பாண்.411)**

என்னும் சங்க இலக்கியச் சான்றுகள் ஊர்களைச் சிறப்பித்து பேசப்படும் தொடர்களால்

அங்கெல்லாம் திருவிழாக்கள் நடைபெற்ற பண்பாட்டு மரபினைக் குறிப்பிடுகின்றது. மேலும்,சிற்சில ஊர்களில் எந்நாளும் விழா நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் அறிய முடிகின்றது

**நிமித்தம்**

அக, புற இலக்கியங்கள் நல்நிகழ்வுகள் நடப்பதற்கு நிமித்தம் பார்க்கும் பழக்கம் மக்களிடத்தே பண்டுதொட்டு இருந்து வந்துள்ளது என்பற்குச் சான்று பகிர்கின்றது. சோதிடக் கலையில் வல்லவன் கணியன், அவனது காலக்கணிப்பு மாற்றமில்லாதது. எனவே அவனையும் அழைத்துக்கொண்டு, சான்றோர்கள் குழு பெண்கேட்டுச் செல்லக் கூடிய மரபு இருந்துள்ளது.

**“நெறிஅறி செறிகுறி புரி திரிபு அறியா அறிவனை முந்துறீஇ”**

**(கலி. 3:46)**

தலைவன் வருகையால் மகிழ்ந்து அவன் வருகையைத் தெரிவித்த காக்கைக்கு எவ்வளவு பலியிடினும் தகும் மன்னும் கருத்தில் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டு இங்கு கருதத்தக்கதாகும்.

சகுனம் என்பதே இலக்கியங்களில் நிமித்தம் என்ற சொல்லால் வழங்கப்பட்டது. பின்னர் நிகழ இருப்பதை முன்னரே அறிவிக்கும் அறிகுறியே நிமித்தமாகும்."நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழ இருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன் உணர்வதாகும்"என்பர் க.காந்தி. பெரும்பான்மையும் அஃறிணைப் பொருள்களைக் கொண்டு மக்கள் நிமித்தம் அறிந்தனர்.

"புனைவினை நல்இல் புள்ளும் பாங்கின" (அகம். 141:3)

"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தம்" (தொல்.பொருள். சூ.1037)

என்னும் தொல்காப்பிய சூத்திரம் சங்க கால மக்களிடம் இருந்த நிமித்த நம்பிக்கையை உணர்த்துகின்றன.

சகுனத்தின் பலன்களைக் கூறுவோரை நிமித்திகன் என்பர். சகுனத்தை நற்சொல் கேட்டல் என்றும் விரிச்சி கேட்டல் என்றும் மொழிவர். ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் சகுனம் பார்த்து பலன் கூறியுள்ளனர். ஆங்கிலத்தில் சகுனம் சொல்பவர்களை ஓமனர்ஸ் என்பர். நிமித்தம் குறித்த நம்பிக்கை இன்றும் பலரிடம் காணப்படுகின்றது. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்றும் வீட்டிலிருந்து ஏதேனும் முக்கிய வேலைக்கு வெளியில் செல்லும்பொழுது எங்கே செல்கிறாய்? என்றால் செல்லும் காரியம் வெற்றி பெறாது என்றும் பல்வேறு நம்பிக்கைகள் இன்றைய சமுதாயத்திலும் நிலவுகின்றன.

**முடிவுரை**

பண்டைத் தமிழர்களின் செம்மார்ந்த வாழ்வியலின் வெளிப்பாடாகக் கலந்தவை வழிபாட்டு முறைகள். இதனைச் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் பாடல்களில் உள்ள வாழ்வியல் சடங்குகள் வழியாக மிக எளிமையான முறையில் இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைத்தது. இவை நூல் முறையாலும் சான்றோர் நெறியாலும் வழிவழி வருவன. இவற்றை அறிந்த முதியோர் ஏனையோர்க்கு வழிகாட்ட, இவை பின்பற்றப்படுபவை. வழிபாடு, விழா முதலிய சடங்குகள் மக்கள் பயன் கருதிச் செய்யப்படுவனவாகும். மழைவளம் பெருகவும், தங்கள் வாழ்வு சிறக்கவும் தெய்வத்தைப் போற்றியுள்ளதையும், இம்மை வாழ்வில் தாம் விரும்பும் பயன்களைத் தெய்வத்திற்குச் செய்யும் பூசை

வழிபாட்டு முறைகளில் மூலம் வெளியிட்டும் பண்பாட்டினை வளர்த்தனர். இக்கருத்தின் மூலம் வழிபாட்டு முறைகளில் உள்ள பண்பாட்டு விழுமியங்களைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. அறிவுடை நம்பி ம.சா., தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை முதல் பதிப்பு நவம்பர் 2010.

2. இளவரசு, சோம., இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
மறுபதிப்பு - 2000.

3. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 600 014. முதற்பதிப்பு : மே - 2005.

4. தமிழண்ணல் (உ.ஆ), திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

5. தமிழண்ணல் (உ.ஆ), தொல்காப்பியம் மூலமும் உரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

6. நிர்மலாதேவி. ஆர் (ப.ஆ), தமிழ் இலக்கியங்களில் சமய நெறிகளும் திருக்கோயில் வழிபாடுகளும், தமிழ்த்துறை வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.

7. மதுரைத் தமிழ்ப் பேரகராதி பாகம் 2, சந்தியா பதிப்பகம், சென்னை – 2004.